# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இன்று (09.11.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில், சிதம்பரம், பைசல் மஹாலில் நடைபெற உள்ளது.

அது சமயம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 11.11.2025 அன்று நடைபெறவிருக்கும் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பாக.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர் - கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

திருச்சிக்கு முதல்வர் இன்று வருகை! அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் சிறப்பான வரவேற்பு!

# திருச்சி மாவட்டக் கழகத்தினர் திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர்கள் க,வைரமணி – ந,தியாகராஜன் எம்,எல்,ஏ, வேண்டுகோள்!

திருச்சி, நவ. 9-

தி.மு.கழக தலைவரும், தமிழக முதல்வருமான, தளபதி அவர்கள் இன்று 09.11.2025ம் ஞாயிற்றுக் கிழமை) மாலை 5.00 மணியளவில் விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தரவிருக்கின்றார்.





திருச்சிக்கு வருகை தரும் முதல்வர் அவர்களுக்கு திருச்சி விமான நிலையத்தில் கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான அண்ணன் கே.என்.நேரு அவர்கள் தலைமையில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகின்றது.

இந்நிகழ்ச்சிகளில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பளர்கள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து நம் முதல்வர் அவர்களுக்கு விமானநிலையத்தில் எழுச்சி மிகு வரவேற்பு அளித்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

---

எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக நவ.11-ல் புதுக்கோட்டையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் எஸ்,ரகுபதி - கே,கே,செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, நவ.9-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:





இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ளது. சிறுபான்மையினர் வாக்கு கள். பட்டியல் இன மக்க

ளின் வாக்குகள் மற்றும் பா.ஜ.க.வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறி வைத்து நீக்கும் நோக்கோடு தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பாஜக அரசு தனக்குப் பாதுகாவலாகவைத்துக் கொண்டு தேர் தல் ஆணையம் இதனைச் செய்திட முயன்றி ருப்பதோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் S.I.R திட்டத்தைச் செயல்படுத்துயவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும். ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்ப தாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது. சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) ன் மூலம் தமிழ் நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தோதல் ஆணையம் திட்டமிடுகிறது.

எனவே, இந்த SIR சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும், அதனை செயல்படுத்தாத ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளதை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் வருகிற நவம்பர் 11 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை, அன்று காலை 10.00 மணியளலில், புதுக்கோட்டை அண்ணா சிலை பின்புறம் உள்ள டாக்ஸி ஸ்டாண்ட் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்டத்தை சேர்ந்த மதச்சார்பற்ற கூட்டணி கட்சி தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள்,

முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள், திராவிட முன்னேற்ற கழகத்தின் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு வெற்றி பெற செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் புதுக்கோட்டைக்கு வருகை!

# புதுக்கோட்டை மாவட்ட எல்லையான மாத்தூரில் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் எஸ்,ரகுபதி - கே,கே,செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை. நவ. 9–

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர், தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள் நாளை. (10.11.2025) காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாவட்டம் மூகாம்பிகை பொறியியல் கல்லூரியில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக திருச்சியிலிருந்து கார் மூலம் வருகை தரும் கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கு நவம்பர் 10ந் தேதி காலை 9 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட எல்லையான மாத்தூரில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் திரளாக கலந்து கொண்டுசிறப்பிக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.



சேலம், அயோத்தியாபட்டணம் மாவட்டக் கழக பிரதிநிதி அகரம் ராஜேந்திரன் மகன் ஏ.ஆர்.தென் பாண்டியன், பூரணி திருமண வரவேற்பில் சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி., சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி., கள்ளக்குறிச்சி தே.மலையரசன் எம்.பி., கழக நிர்வாகிகள் மு.ரா.கருணாநிதி, ஏ.ஏ.ஆறுமுகம், சின்னதுரை, விஜயகுமார் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

---

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த உதவி மையம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஈடுபடும் கழகத்தினருக்கு எழும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உதவிடும் வகையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழகம் மூலம் ஒருங்கிணைத்திட கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் **என். ஆர். இளங்கோ எம்.பி.**, மேற்பார்வையில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கழக நிர்வாகிகள் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சந்தேகங்களை 08065420020 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கான பதில்களை பெற்று முறையாக பணிகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| மண்டலம் | மாவட்டம் | பெயர் | தொடர்பு எண் |
|---|---|---|---|
| தெற்கு | கன்னியாகுமரி கிழக்கு<br>கன்னியாகுமரி மேற்கு<br>திருநெல்வேலி கிழக்கு<br>திருநெல்வேலி மத்திய<br>திருநெல்வேலி மேற்கு<br>தூத்துக்குடி தெற்கு<br>தூத்துக்குடி வடக்கு<br>தென்காசி தெற்கு<br>தென்காசி வடக்கு | வழக்கறிஞர்<br>கே.எஸ்,ரவிச்சந்திரன் | 9840022250 |
| வடக்கு | இராணிப்பேட்டை<br>கள்ளக்குறிச்சி தெற்கு<br>கள்ளக்குறிச்சி வடக்கு<br>சேலம் கிழக்கு<br>சேலம் மத்திய<br>சேலம் மேற்கு<br>தர்மபுரி கிழக்கு<br>தர்மபுரி மேற்கு<br>திருப்பத்தூர்<br>திருவண்ணாமலை தெற்கு<br>திருவண்ணாமலை<br>வடக்கு<br>வேலூர் வடக்கு<br>வேலூர் தெற்கு | வழக்கறிஞர்<br>ஜெ.பச்சையப்பன் | 9840260178 |
| மதுரை | சிவகங்கை<br>மதுரை தெற்கு<br>மதுரைமாநகர்<br>மதுரை வடக்கு<br>தேனி வடக்கு<br>தேனி தெற்கு<br>இராமநாதபுரம்<br>விருதுநகர் தெற்கு<br>விருதுநகர் வடக்கு | வழக்கறிஞர்<br>பாலாஜி | 9710582658 |
| சென்னை | காஞ்சிபுரம் வடக்கு<br>சென்னை கிழக்கு<br>சென்னை தெற்கு<br>சென்னைதென் மேற்கு<br>சென்னை மேற்கு<br>சென்னைவட கிழக்கு<br>சென்னை வடக்கு<br>திருவள்ளூர் கிழக்கு<br>திருவள்ளூர் மத்திய<br>திருவள்ளூர் மேற்கு | வழக்கறிஞர்<br>நந்தகோபால் | 9884153737 |
| டெல்டா | அரியலூர்<br>கடலூர் மேற்கு<br>தஞ்சாவூர் தெற்கு<br>தஞ்சாவூர் மத்திய<br>தஞ்சாவூர் வடக்கு<br>திருச்சிராப்பள்ளி தெற்கு<br>திருச்சிராப்பள்ளி மத்திய<br>திருச்சிராப்பள்ளி வடக்கு<br>புதுக்கோட்டை வடக்கு<br>புதுக்கோட்டை தெற்கு<br>திருவாரூர்<br>நாகை<br>பெரம்பலூர்<br>மயிலாடுதுறை | வழக்கறிஞர் பெ.ரகு | 9444413889 |
| விழுப்புரம் | கடலூர் கிழக்கு<br>காஞ்சிபுரம் தெற்கு<br>விழுப்புரம் தெற்கு<br>விழுப்புரம் மத்திய<br>விழுப்புரம் வடக்கு | வழக்கறிஞர்<br>சந்திரபோஸ் | 9841364135 |
| கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி கிழக்கு<br>கிருஷ்ணகிரி மேற்கு<br>திண்டுக்கல் கிழக்கு<br>திண்டுக்கல் மேற்கு<br>திருப்பூர் கிழக்கு<br>திருப்பூர் தெற்கு | வழக்கறிஞர்<br>என்.மருது கணேஷ் | 9840034950 |
| மேற்கு | ஈரோடு தெற்கு<br>ஈரோடு மத்திய<br>ஈரோடு வடக்கு<br>கரூர்<br>கோயம்புத்தூர் தெற்கு<br>கோயம்புத்தூர்மாநகர்<br>கோயம்புத்தூர் வடக்கு<br>திருப்பூர் மத்திய<br>திருப்பூர் வடக்கு<br>நீலகிரி<br>நாமக்கல் கிழக்கு<br>நாமக்கல் மேற்கு | வழக்கறிஞர் சசிதரன் | 9952084065 |

ஒருங்கிணைப்பு பணிக்கு உதவிட :
**அழகிரி சதாசிவம்,** (9841950707)
(மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்)
**வே. கௌதமன்,** (9940923535)
(மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்)

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை -18
நாள்- 07.11.2025

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**